அவருடைய ஆட்சி நிலை பெறுவதற்கு எல்லோரும் ஒற்றுமையாக இங்கே வந்து, இந்த ஆட்சி மீது நம்பிக்கையைத் தெரிவித்திருக்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கு இது ஒரு பொன்னாள். இங்கேயிருந்து விலகிச் சென்றவர்கள் கூட எண்ணிப் பார்ப்பார்கள்—புரட்சித் தலைவருக்குத் துரோகம் செய்து விட்டோம் என்று எண்ணுவார்கள். அங்கேயிருந்து துரோகம் செய்துவிட்டு இங்கே வந்தவர்களும் எண்ணுவார்கள். அப்படியிருக்கக் கூடிய நிலையில் இன்றைக்கு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. அரசினர் தீர்மானம்.

விதி 25 (1)–ன் படி பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து நம்முடைய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சபையை ஒத்தி வைக்கும் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25 (1)ன்படி பேரவை இன்று ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் பிப்ரவரி திங்கள் 1ஆம் தேதி காலை 9-00 மணிக்குக் கூடும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் 1988 பிப்ரவரி 1ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை கூடும.

பின்னர் பேரவை பிற்பகல் 3-48 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்:

(ஏதுமில்லை.)